## Toa Payoh Heritage Trail
தோ பாயோ மரபுடைமைப் பாதை

தோ பாயோ மரபுடைமைப் பாதை, சிங்கப்பூரிலுள்ள இடங்களின் வரலாற்று, சமூக நினைவலைகளை ஆவணப்படுத்திப் படைக்கும் நோக்கத்துடன் தேசிய மரபுடைமைக் கழகம் தொடர்ந்து மேற்கொண்டுவரும் முயற்சியின் ஒரு பகுதியாகும். இவ்வட்டாரத்தில் வேலை செய்தவர்கள், வாழ்ந்தவர்கள், அல்லது விளையாடியவர்களுக்கு இனிமையான அக்கால நினைவுகளை இப்பாதை ஞாபகப்படுத்தும் என்றும், வருகையாளர்களுக்கும் புதிய குடியிருப்பாளர்களுக்கும் பயன்மிக்க தகவல் வளமாகப் பயன்படும் என்றும் நம்புகிறோம்.

---

### Block 53, The "VIP Block"
**"விஐபி" கட்டடமான புளோக் 53**

1967ல் கட்டி முடிக்கப்பட்ட புளோக் 53, சிங்கப்பூரின் பொதுக் குடியிருப்புக்கு அடையாளமாகத் திகழும் காட்சிப்பொருளாக நெடுங்காலமாகக் கருதப்படுகிறது. இந்தக் கட்டடம் தனித்துவமான "Y" வடிவம் கொண்டது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பிரமுகர்கள் பலரும் அடுத்தடுத்து இந்தக் கட்டடத்திற்கு வருகை அளித்ததைத் தொடர்ந்து, "விஐபி கட்டடம்" எனப் பிரபலமடைந்தது.

1960களின் ஆரம்பகாலத்தில், மக்கள் தொகை அதிகரிப்பாலும் குடியிருப்புத் தேவைகளாலும் சிங்கப்பூர் நெருக்குதலுக்கு உள்ளானது. அந்தக் காலகட்டத்தில், குடியிருப்புத் தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்வதற்காக, முக்கியமாக நீள்வடிவக் கட்டடங்களைக் கட்டித் தருவதில் வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (வீவக) கவனம் செலுத்தியது.

வீவக-வின் இரண்டாவது ஐந்தாண்டு கட்டுமானத் திட்டத்தின்போது தோ பாயோ நகரின் கட்டுமானப் பணி தொடங்கியது. அதற்குள், கணிசமான சிங்கப்பூரர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுவிட்டன. எனவே, வீவக-வின் கட்டட வடிவமைப்பாளர்கள் தோ பாயோவில் பல்வேறு கட்டட வடிவங்களை அறிமுகப்படுத்த முடிந்தது. "Y" வடிவிலான புளோக் 53, வௌவால் வடிவிலான புளோக் 116, வளைவான புளோக் 157 போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள். புளோக் 53ன் 19 மாடிகளின் உச்சியில் ஒரு பெரிய தண்ணீர்த் தொட்டியும் உள்ளது. அதில் முன்பு விளம்பரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

புளோக் 53ன் கூரை உச்சியில் காட்சி மாடமும் உள்ளது (தற்போது பொதுமக்களுக்கு மூடப்பட்டுள்ளது). அங்கிருந்து, தோ பாயோ நகர் முழுவதையும் பார்க்கலாம். அப்போதைய ஆஸ்திரேலியப் பிரதமர் ஜான் கோர்டன், 1968 ஏப்ரல் மாதம் புளோக் 53க்கு வருகையளித்தார். இவரே இந்தக் கட்டடத்தைப் பார்வையிட்ட முதல் வெளிநாட்டுப் பிரமுகர். இவரைத் தொடர்ந்து பிரிட்டனைச் சேர்ந்த இரண்டாம் எலிசபெத் ராணி, இளவரசி ஆன், இளவரசர் ஃபிலிப் ஆகியோரும், முன்னாள் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகே சிரிமாவோ, சிங்கப்பூரின் இரண்டாவது அதிபர் பெஞ்சமின் ஷியர்ஸ் ஆகியோரும் வருகையளித்தனர்.

இன்று, சுற்றுவட்டாரத்தில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தாலும், புளோக் 53 புதுமையான கட்டட வடிவமைப்புக்கு ஒரு முன்மாதிரியாகவும் சிங்கப்பூரின் பொதுக் குடியிருப்பு வரலாற்றுச் சின்னமாகவும் திகழ்கிறது.



"Y" வடிவிலான புளோக் 53, 1967

*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



புளோக் 53ல் குடியிருப்பாளர்களும் வீடு வாங்க வந்தவர்களும், 1967

*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



முன்னாள் வீவக தலைவர் லீ ஹீ செங்குடன் இரண்டாம் எலிசபெத் ராணியார் புளோக் 53ன் கூரையுச்சி காட்சி மாடத்திலிருந்து பார்வையிடுகிறார், 1972

*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



வௌவால் வடிவிலான புளோக் 116, 1969
*வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திற்கு நன்றி*

---

**Chung Hwa Medical Institution**
**ச்சுங் ஹுவா மருத்துவ நிலையம்**

சிங்கப்பூர் சீன வைத்தியர்கள் சங்கத்தால் நிறுவப்பட்ட ச்சுங் ஹுவா மருத்துவ நிலையம், தெலுக் ஆயர் ஸ்திரீட்டில் அமைந்திருந்த ச்சுங் ஹுவா இலவச மருந்தகத்தின் ஒரு கிளையாகத் திறக்கப்பட்டது.

சிங்கப்பூரில் பாரம்பரிய சீன வைத்திய முறையை மேம்படுத்துவதற்காக வைத்தியர்கள் சிலர் ஒன்றுசேர்ந்து 1946ல் சிங்கப்பூர் சீன வைத்தியர்கள் சங்கத்தை அமைத்தார்கள். 1952ல், ஏழைகளுக்கான முதல் மருந்தகத்தை ச்சுங் ஷான் சங்கத்தில் இந்தச் சங்கம் திறந்தது. அந்த மருந்தகம் 1956ஆம் ஆண்டில் 202 தெலுக் ஆயர் ஸ்திரீட் எனும் முகவரிக்கு மாறிச்சென்றது. 1970களில், கேலாங்கில் இருந்த சங்கத்தின் இரண்டாவது கிளையை அரசாங்கம் கையகப்படுத்தி, அதற்குப் பதிலாக தோ பாயோவில் ஒரு நிலப்பகுதியை வழங்கியது.

தோ பாயோவில் ச்சுங் ஹுவா மருத்துவ நிலையத்தைக் கட்டுவதற்காக தொழில்துறைத் தலைவர்கள் முதல் டாக்சி ஓட்டுநர்கள் வரை சமூகத்தினர் பலரும் நிதி திரட்டிப் பங்களித்தனர். அறப்பணி விற்பனைகள், கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றின் மூலமும் நிதி திரட்டப்பட்டது. இந்த முயற்சியின் பலனாக, S$5 மில்லியனுக்கு மேல் நிலையத்துக்காகத் திரட்டப்பட்டது.

தோ பாயோவில் அமைக்கப்பட்ட நிலையம், குத்தூசி மருத்துவம் போன்ற பாரம்பரிய சீன வைத்திய முறைகளில் ஆய்வும் மேம்பாடும் செய்யும் வகையில் விரிவுபடுத்த உதவியதோடு, அதன் மருத்துவச் செயல்பாடுகளை விரிவாக்கவும் உதவியது. இந்த மருந்தகம் 27 அக்டோபர் 1978 அன்று திறக்கப்பட்டபோது, பல்வேறு இனங்களைச் சேர்ந்த 400க்கும் மேற்பட்ட நோயாளிகள் அங்கு சென்றனர். மிகவும் குறைவான மருத்துவ ஆலோசனைக் கட்டணத்தைச் செலுத்தி இலவச சிகிச்சையும் மருந்துகளும் பெற்றனர்.

இன்று, ச்சுங் ஹுவா மருத்துவ நிலையம் குறைந்த கட்டணம் கொண்ட, தள்ளுபடியுடன்கூடிய அல்லது இலவசமான மருத்துவப் பராமரிப்பைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. அதே வேளையில், புற்றுநோய், இதய நோய்கள், நீரிழிவு உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கும் உடல்நலப் பிரச்சனைகளுக்கும் பாரம்பரிய சீன வைத்திய முறைகளை மேம்படுத்தி வருகிறது. இந்தக் கட்டடத்தில் சிங்கப்பூர்

சீன வைத்தியர்கள் சங்கத்தின் தலைமையகம், பாரம்பரிய சீன வைத்தியக் கல்லூரி, இரண்டு ஆய்வு நிலையங்கள் ஆகியனவும் அமைந்துள்ளன.




தெலுக் ஆயர் ஸ்திரீட்டில் அமைந்திருந்த ச்சுங் ஹுவா இலவச மருந்தகம், 1950கள்
*ச்சுங் ஹுவா மருத்துவ நிலையத்திற்கு நன்றி*



தெலுக் ஆயரில் அமைந்திருந்த ச்சுங் ஹுவா இலவச மருந்தகத்தில் மருத்துவ ஆலோசனை அளிக்கப்படுகிறது, 1950கள்
*ச்சுங் ஹுவா மருத்துவ நிலையத்திற்கு நன்றி*



நோயாளிகள் மருத்துவ ஆலோசனை பெறுவதற்காகக் காத்திருக்கின்றனர், 1963
*ச்சுங் ஹுவா மருத்துவ நிலையத்திற்கு நன்றி*



ச்சுங் ஹுவா மருத்துவ நிலையத்தின் காத்திருக்கும் அறை, 1995
*ச்சுங் ஹுவா மருத்துவ நிலையத்திற்கு நன்றி*

---

**Church of the Risen Christ**
**உயிர்த்த கிறிஸ்துவின் தேவாலயம்**

சிங்கப்பூரின் முதல் பேராயர் மிஷல் ஒல்கொமெண்டி 1971ல் திறந்து வைத்த உயிர்த்த கிறிஸ்துவின் தேவாலயமே தோ பாயோவின் முதல் கத்தோலிக்கத் தேவாலயம். ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபின் உயிர்த்தெழுந்ததாகச் சொல்லப்படும் கிறிஸ்துவ நம்பிக்கையிலிருந்து தேவாலயத்திற்கு இப்பெயர் வைக்கப்பட்டது.

1960களின் பிற்பகுதியில், தோ பாயோவின் கத்தோலிக்கச் சமூகம், லோரோங் 4 புளோக் 82ல் அமைந்திருந்த ஹோ பிங் நிலையத்திலும் வீடமைப்பு வளர்ச்சிக் கழக நிகழ்ச்சி மண்டபத்திலும் சமய, சமூக நடவடிக்கைகளை நடத்தியது. தேவாலயத்தின் முதல் பாதிரியார் அருட்தந்தை பியர் ஏப்ரியலின் தலைமைத்துவத்தின்கீழ், தற்போதைய தேவாலயக் கட்டடத்தின் கட்டுமானத்திற்காகச் சமூகம் சுமார் $450,000 நிதி திரட்டியது.

இந்தத் தேவாலயம் 1970களில் இருந்து ஆங்கிலம், மாண்டரின், தமிழ் ஆகிய மொழிகளில் வழிபாட்டுக்கூட்டங்களை நடத்தி வருகிறது. கிறிஸ்மஸ், ஈஸ்தர் போன்ற பிரபலமான பண்டிகைகள் தவிர, அன்னை வேளாங்கண்ணி ஆண்டுப் பெருவிழாவையும் தேவாலயம் கொண்டாடுகிறது. அண்மைக் காலமாக, சிம்பாங் காபி எனும் பாரம்பரிய ஒன்பது நாள் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தையும் பிலிப்பினோ வழிபாட்டாளர்களுக்காக நடத்தி வருகிறது.

தோ பாயோவில் உள்ள மற்ற சமய அமைப்புகளைப் போலவே, உயிர்த்த கிறிஸ்துவின் தேவாலயமும் தோ பாயோவில் சமூக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளது. இந்நகரின் ஆரம்பகால ஆண்டுகளில், குழந்தைப் பராமரிப்புக் குழுக்கள், துணைப்பாட வகுப்புகள், மற்ற பலவகையான சமூகப் பராமரிப்புத் திட்டங்கள் போன்றவற்றுக்குத் தேவாலயம் ஏற்பாடு செய்திருக்கிறது.



தேவாலயம் கட்டப்படுவதற்குமுன் வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் கிழக்கு வட்டார அலுவலகத்திலிருந்த மண்டபத்தில் அருட்தந்தை பியர் ஏப்ரியல் வழிநடத்திய வழிபாட்டுக் கூட்டம், 1960கள்-1970கள்
*உயிர்த்த கிறிஸ்துவின் தேவாலயத்திற்கு நன்றி*




ஆரம்பத்திலிருந்த தேவாலயத்தின் சன்னதியும் பீடமும், 1970கள்
*உயிர்த்த கிறிஸ்துவின் தேவாலயத்திற்கு நன்றி*



அன்னை வேளாங்கண்ணி ஆண்டுப் பெருவிழாக் கொண்டாட்டத்தில் திருச்சபையினர், 2022
*உயிர்த்த கிறிஸ்துவின் தேவாலயத்திற்கு நன்றி*

---

## Former 1973 SEAP Games Village
## முன்னாள் 1973 SEAP விளையாட்டுப் போட்டியின் தங்குமிடம்

1973ல் நடைபெற்ற ஏழாவது தென்கிழக்கு ஆசிய தீபகற்ப (SEAP விளையாட்டுப் போட்டிதான் (இப்போது தென்கிழக்கு ஆசிய விளையாட்டுப் போட்டி) சிங்கப்பூரில்

பெரிய அளவில் நடத்தப்பட்ட முதல் அனைத்துலக விளையாட்டுப் போட்டி. பெரும்பாலான அனைத்துலக விளையாட்டுப் போட்டிகளின் தங்குமிடங்கள் பிரத்யேகமாகக் கட்டப்படும். அதுவும், உள்ளூர் மக்களின் வசிப்பிடங்களிலிருந்து தூரமாக அமைந்திருக்கும். ஆனால், 1973 SEAP விளையாட்டுப் போட்டிக்கு வருகையளித்த விளையாட்டாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சிங்கப்பூர் வாழ்க்கையை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

விளையாட்டுப் போட்டியின் தங்குமிடமாக தோ பாயோ தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு, தேசிய விளையாட்டரங்கமும், போட்டியும் பயிற்சியும் நடத்துவதற்காகப் புதிதாகக் கட்டப்பட்ட தோ பாயோ விளையாட்டு வளாகமும் அருகில் இருந்தது காரணமாகும். போட்டியில் பங்கெடுத்த ஏழு நாடுகளின் 1,500க்கும் மேற்பட்ட விளையாட்டாளர்கள், வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்பட்ட நான்கு பாயிண்ட் புளோக்குகளில் தங்க வைக்கப்பட்டனர். தோ பாயோவின் மையப் பகுதியில் அமைந்திருந்த அந்தக் கட்டடங்கள் ஒவ்வொன்றிலும், முழுமையாக அறைகலன்களைக் கொண்டிருந்த 96 வீடுகளும் பொழுதுபோக்குக்காக ஒரு மாடியும் இருந்தன.

புதிதாக உருவான தோ பாயோ நகரில், கடைகள், திரையரங்குகள், உணவங்காடி நிலையங்கள், ஒரு பேரங்காடி, ஓர் அஞ்சலகம், ஒரு பேருந்து நிலையம் போன்ற பலதரப்பட்ட வசதிகள் இருந்ததால் விளையாட்டுப் போட்டியின் தங்குமிடத்திற்குப் பொருத்தமாக அது இருந்தது. அங்கு 1,800 பேர் உணவருந்தக்கூடிய மண்டபமும் இருந்தது. அங்கு பரிமாறப்பட்ட உணவு மிகவும் சுவையாக இருந்ததால், விளையாட்டாளர்களின் எடை கூடிவிடுமோ என அதிகாரிகள் கவலைப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

முன்னாள் SEAP விளையாட்டுப் போட்டியின் செயலகக் கட்டடத்தில் இன்று தோ பாயோ நூலகம் அமைந்துள்ளது. பாயிண்ட் புளோக்குகளிலிருந்த வீடுகள், விளையாட்டுப் போட்டிக்குப் பிறகு பொதுமக்களிடம் விற்கப்பட்டன. போட்டிக்காகக் கட்டப்பட்ட இடங்களைப் பலதரப்பட்ட விளையாட்டு, சமூக நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் தொடர்ந்து நன்கு பயன்படுத்திவருகின்றனர்.



தோ பாயோ சென்ட்ரலில் இருந்த 1973 SEAP விளையாட்டுப் போட்டியின் தங்குமிடம். பாயிண்ட் புளோக் 193 (இடது), 191 (நடுவில்), 179 (வலது, ஒரு பகுதி தெரிகிறது) ஆகிய மூன்று கட்டடங்களும் அவற்றுக்கு நடுவில் SEAP விளையாட்டுப் போட்டியின் செயலகக் கட்டடமும் காணப்படுகின்றன, 1970கள்
*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*




அப்போதைய துணைப் பிரதமர் கோ கெங் சுவீ (வெண்ணிற ஆடையில்), SEAP விளையாட்டுப் போட்டியின் தங்குமிடத்தில் நடைபெற்ற தொடக்க விழா விருந்துபசரிப்பில் கலந்துகொள்கிறார், 1973
*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



அப்போதைய சமூக விவகார அமைச்சர் ஒத்மான் வொக் (வலது), விளையாட்டுப் போட்டியின் தங்குமிடத்தில் விளையாட்டாளர்களைச் சந்திக்கிறார், 1973
*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



தோ பாயோ நீச்சல் குளத்தில் நீர்ப் பந்தாட்டப் போட்டியில் விளையாட்டாளர்கள் பங்குபெறுகின்றனர், 1973

*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*

---

**Lian Shan Shuang Lin Monastery**
**லியன் ஷான் ஷுவாங் லின் மடாலயம்**

1909ல் கட்டி முடிக்கப்பட்ட லியன் ஷான் ஷுவாங் லின் மடாலயம் (சியோங் லிம் கோயில் என்றும் அறியப்படும்), சிங்கப்பூரின் ஆகப் பழமையான பௌத்த மடாலயமாகத் திகழ்கிறது. மாண்டரின் மொழியில் மடாலயத்தின் பெயர் "தாமரை மலையின் இரட்டைத் தோப்புகள்". புத்தர் *சாலா* மரத் தோப்பில் அமர்ந்திருந்தபோது முக்தி அடைந்தார் என்ற நம்பிக்கையே இப்பெயரின் பின்னணி. மடாலயத்தில் உள்ள தேவலோக மன்னர்களின் மண்டபமும் (டியன் வாங் டியன்), மஹாவீர மண்டபமும் (டா சியோங் பாவ் டியன்) 1980ஆம் ஆண்டு தேசிய நினைவுச்சின்னங்களாகக் கூட்டாக அறிவிக்கப்பட்டன.

சமூகத் தலைவர் லாவ் கிம் பொங்கும், சீனாவின் ஹுய்'ஆன் வட்டாரத்தைச் சேர்ந்த 12 பௌத்த துறவிகளும் பெண் துறவிகளும் 1898ல் இந்த மடாலயத்தைத் தோற்றுவித்தனர். லாவும் அவரது மகனும் மேற்கிலிருந்து பொன்னிற ஒளி மின்னுவதுபோல் கனவு கண்ட பிறகு, சிங்கப்பூர் நீர்முகப்புக்குச் சென்று காத்திருந்தனர். அங்கே, துறவிகளை அவர்கள் சந்தித்தனர். மரியாதைக்குரிய சியன் ஹுய் வழிநடத்திய அந்தத் துறவிகள், புனித யாத்திரைக்குப் பிறகு சீனாவுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தனர். லாவ் அவர்களை சிங்கப்பூரில் தங்கியிருந்து பௌத்த சமயத்தைப் பரப்பச்சொல்லி அழைப்பு விடுத்தார். மாண்புமிகு சியன் ஹுய் மடாலயத்தின் முதல் மடாதிபதியாகப் பொறுப்பேற்றார். மடாலயத்தை அமைக்க 12 ஏக்கர் நிலத்தையும் நிதியையும் லாவ் நன்கொடையாக வழங்கினார். வட்டார நாடுகளிலிருந்தும் பலர் நிதி வழங்கினர்.

இந்த மடாலயம் சென் பௌத்த முறைப்படியும், சீனாவின் ஃபூச்சோவ் நகரிலுள்ள *சீ ச்சான்* மடாலயத்தின் வடிவிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வடிவத்தில், *சொங் லின்* (மாண்டரின் மொழியில் "அடுக்கடுக்கான காடு" என்று அர்த்தம்) அணுகுமுறையைக் காணலாம். மடாலயத்தின் வழக்கங்களுக்கும் சமயச் சடங்குகளுக்கும் ஏற்றதொரு வடிவமைப்பு இது.

இன்று, தோ பாயோவிலும் மற்ற வட்டாரங்களிலும் இருந்து வரும் பக்தர்களின் மையமாக லியன் ஷான் ஷுவாங் லின் மடாலயம் தொடர்ந்து விளங்குகிறது. அதே சமயத்தில், மடாலயப் பயிற்சியும் கல்வியும் வழங்கும் தமது பங்கையும் அது நிறைவேற்றுகிறது.



லாவ் கிம் பொங், 1907

*பொடென்-குளோஸ் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*





தேவலோக மன்னர்களின் மண்டபமும் (டியன் வாங் டியன்) அதன் முற்றமும், 1900கள்

*லீ கிப் லின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



மஹாவீர மண்டபம் (டா சியோங் பாவ் டியன்), 1950கள்

*லீ கிப் லின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



அமிதாப புத்தர், கௌதம புத்தர், பைசையகுரு புத்தர் வீற்றிருக்கும் மஹாவீர மண்டபம், 1920கள்

*லிம் கெங் சாய் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*

---

**Masjid Muhajirin**
**மஸ்ஜித் முஹாஜிரின் பள்ளிவாசல்**


தோ பாயோவில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாசலான மஸ்ஜித் முஹாஜிரின், 8 ஏப்ரல் 1977 அன்று திறக்கப்பட்டது. பள்ளிவாசல் கட்டட நிதியையும் (இன்றைய பள்ளிவாசல் கட்டட, மெண்டாக்கி நிதி) சமூகத்தின் பங்களிப்புகளையும் பயன்படுத்தி கட்டப்பட்ட முதல் பள்ளிவாசலும் இதுதான்.

ஏழாம் நூற்றாண்டில் நபிகளுடன் மெக்காவிலிருந்து மதீனாவுக்கு *ஹிஜ்ரா* பயணம் மேற்கொண்ட முஹாஜிருன் (அரபு மொழியில் "புலம்பெயர்பவர்" என்று அர்த்தம்) முஸ்லிம் குழுவை அடிப்படையாகக் கொண்டு பள்ளிவாசலுக்குப் பெயர் வைக்கப்பட்டது.

பெர்சாத்துவான் கெபாஜிகான் முஸ்லிம் தோ பாயோ (தோ பாயோ முஸ்லிம் ஆதரவுச் சங்கம்) அமைப்பிலிருந்து மஸ்ஜித் முஹாஜிரின் உருவானது. இந்தச் சங்கம், வசதி குறைவான குடும்பங்களுக்கு உதவி வழங்குவதற்காக 1960களின் பிற்பகுதியில் தொடங்கப்பட்டது. 1971ல் இருந்து, சங்கமும் சமூகத் தொண்டூழியர்களும் பள்ளிவாசலுக்காக நிதி திரட்ட உதவி செய்தனர். வீடு வீடாகச் சென்றும், உணவங்காடிக் கடைகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்தும் நன்கொடைகள் சேகரிக்கப்பட்டன. அறப்பணி விற்பனைகளும் நடத்தப்பட்டன. இந்த முயற்சிகளின் பலனாக, பள்ளிவாசல் கட்டுமானச் செலவான $900,000ல் கிட்டத்தட்ட பாதியளவுக்குத் திரட்டப்பட்டது.


ஆரம்பத்தில், பள்ளிவாசல் தூபியின்மீது பாரசீக - இந்தியக் கட்டடக்கலை பாணியிலான வெங்காய வடிவ குவிமாடம் அமைந்திருந்தது. பின்னர், சிங்கப்பூர் இஸ்லாமிய மையத்தின் ஒரு பகுதியாகப் புதிதாகக் கட்டப்பட்ட பள்ளிவாசல் 2009ல் திறக்கப்பட்டது. தற்போதைய மஸ்ஜித் முஹாஜிரின் பள்ளிவாசலில் இஸ்லாமியக் கட்டடக்கலை பாணியிலான வில்வளைவு விதானங்கள், நளினமான மலர் வடிவங்கள், வடிவியல் சின்னங்கள் ஆகியவற்றைக் காணலாம். காவிக்கற்கள் பதிக்கப்பட்ட அதன் அடுக்குக் கூரை, மலாய் வடிவமைப்பின் அடையாளச் சின்னமாகத் திகழ்கிறது.

மஸ்ஜித் முஹாஜிரின் பள்ளிவாசல், சமூகத்தின் ஒருமைப்பாட்டையும் தற்சார்பையும் வெளிப்படுத்தும் சின்னமாக இன்று விளங்குகிறது. இஸ்லாமிய சமயக் கூட்டத்திற்கும் கல்விக்கும் ஒரு மையமாகத் திகழும் இந்தப் பள்ளிவாசல், தோ பாயோவிலும் மற்ற வட்டாரங்களிலும் வசிக்கும் முஸ்லிம் சமூகத்திற்குத் தொடர்ந்து சேவை வழங்கிவருகிறது.




பிராடல் சாலையின் மறுபக்கத்திலிருந்து ஆரம்பகாலப் பள்ளிவாசலின் தோற்றம், 1970கள்

*சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்தின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



ரமலான் நோன்பு மாதத்தில் *புபுர்* (கஞ்சி) விநியோகம், 1980கள்

*மஸ்ஜித் முஹாஜிரின் பள்ளிவாசலுக்கு நன்றி*



நோன்புப் பெருநாள் தொழுகைக் கூட்டம், 1980கள்
*மஸ்ஜித் முஹாஜிரின் பள்ளிவாசலுக்கு நன்றி*



குர்ஆன் புனித நூலின் "மனம்வருந்தி மன்னிப்பு நாடுதல்" என்ற தலைப்பிலான ஒன்பதாவது அத்தியாயத்திலிருந்து பொறிக்கப்பட்ட வாசகங்கள், பள்ளிவாசலின் உரை மேடையை அலங்கரிக்கின்றன, 2022
*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*

---

## Sri Vairavimada Kaliamman Temple
## ஸ்ரீ வைராவிமட காளியம்மன் கோயில்


ஸ்ரீ வைராவிமட காளியம்மன் கோயில் 1860களில் அமைக்கப்பட்டது. ஆர்ச்சர்ட் சாலையில் இருந்த ஒரு சத்திரமே (ஓய்விடம்) கோயிலின் துவக்கத்திற்கு வழிகோலியது. அந்தச் சத்திரம், சுற்றுவட்டாரப் பகுதிகளில் வாழ்ந்துவந்த இந்துக்களுக்கு சேவை செய்துவந்தது. பின்னர், காளியம்மனை வழிபடும் கோயிலாகச் சத்திரம் உருமாறியது.

கில்லினி சாலை, ஆர்ச்சர்ட் சாலை சந்திப்புக்கு அருகில்தான் கோயில் முதன்முதலில் கட்டப்பட்டது. பிற்பாடு, 1921ல் சோமர்செட் சாலைக்கும், அதன்பின்னர் 1982ல் தோ பாயோவுக்கும் இடம் மாறிச் சென்றது. கோயிலின் முதல் குடமுழுக்கு விழா 1986 மார்ச் மாதம் நடைபெற்றது. இந்து அறக்கட்டளை வாரியம் மேற்கொண்ட முனைப்பின்கீழ், சிங்கப்பூரில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வகுப்புகள் நடத்திய முதல் அமைப்பாகக் கோயில் பெயர்பெற்று விளங்குகிறது.

கோயிலில் 1990ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சரஸ்வதி பாலர் பள்ளி இந்த வகுப்புகளை நடத்தியது.

ஸ்ரீ வைராவிமட காளியம்மன் கோயில் கோபுரத்தில் காளியம்மன் சிலை வீற்றுள்ளது. கோயில் கருவறைகளில் காளியம்மன், விநாயகர், முருகன், சுவாமி ஐயப்பன், குருவாயூரப்பன், துர்க்கையம்மன், பெரியாச்சி அம்மன், அங்காள பரமேஸ்வரி, மதுரை வீரன் உள்ளிட்ட மற்ற தெய்வங்கள் வீற்றுள்ளன.

இன்று, கோயிலில் நடைபெறும் முக்கிய விழாக்களில் காளியம்மனின் ஒன்பது வடிவங்களுக்குக் காணிக்கை செலுத்தும் நவக்ஸ்ரீ ஹோமம், கோயிலைப் புதுப்பித்து காளியம்மனைக் கௌரவிக்கும் வருடாந்தர பிரம்மோற்சவம், கொடியேற்றம், தோ பாயோவுக்கும் மற்ற வட்டாரங்களுக்கும் செல்லும் இரத ஊர்வலம் ஆகியவை உள்ளடங்கும்.



சோமர்செட் சாலையில் அமைந்திருந்த ஸ்ரீ வைராவிமட காளியம்மன் கோயில், தேதியில்லை

*ஸ்ரீ வைராவிமட காளியம்மன் கோயிலுக்கு நன்றி*



நவக்ஸ்ரீ ஹோமத்தின்போது அர்ச்சகர்கள் ஹோமம் வளர்க்கின்றனர், தேதியில்லை

*ஸ்ரீ வைராவிமட காளியம்மன் கோயிலுக்கு நன்றி*



பிரம்மோற்சவ ஊர்வலத்திற்காக வெள்ளி இரதத்தில் தெய்வச் சிலையைத் எடுத்துச்செல்ல அர்ச்சகர்கள் தயார்ப்படுத்துகின்றனர், தேதியில்லை
*ஸ்ரீ வைராவிமட காளியம்மன் கோயிலுக்கு நன்றி*

---

**Toa Payoh Dragon Playground**
**தோ பாயோ கடல்நாக விளையாட்டுத் திடல்**

1960களில், வீடமைப்பு வளர்ச்சிக் கழக (வீவக) குடியிருப்பு நகரங்களில் இருந்த விளையாட்டுத் திடல்களில் சறுக்குகள், ஊஞ்சல்கள், ஏற்றப்பலகை போன்ற குறிப்பிட்ட பயன்பாட்டுக்குரிய பொருட்களே பெரும்பாலும் இருந்தன. எனவே, கற்பனையைத் தூண்டும் விளையாட்டுகளில் சிறுவர்களை அதிகமாக ஈடுபடுத்த, வீவக சொந்தமாக வடிவமைத்துக் கட்டிய புதிய விளையாட்டுத் திடல் தொடர்கள் 1970களில் அறிமுகமாயின. முதல் தொடர் விலங்குகளைக் கருப்பொருளாகக் கொண்டிருந்தது. இரண்டாவது தொடர், சிங்கப்பூரர்களுக்குப் பழக்கப்பட்ட உள்ளூர் சின்னங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆசிய இதிகாசங்களிலும் நாட்டுப்புறக் கதைகளிலும் இடம்பிடித்த கடல்நாகம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.


இரண்டாம் தொடரில் இடம்பெற்ற தோ பாயோ கடல்நாக விளையாட்டுத் திடல் 1979ல் கட்டப்பட்டது. வீவக கட்டட வடிவமைப்பாளர் திரு கோர் இயன் கீ இதனை வடிவமைத்தார். தோ பாயோ நகரப் பூந்தோட்டத்தில் (இன்றைய தோ பாயோ நகரப் பூங்கா) முன்பு நிறுவப்பட்டிருந்த கடல்நாக வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த விளையாட்டுத் திடலை இவர் வடிவமைத்தார். நகரப் பூந்தோட்டத்தின் கடல்நாக விளையாட்டுத் திடல் (பின்னர் அகற்றப்பட்டுவிட்டது) பெரிய உலோகத் தலையும், நீளமான முதுகெலும்பும், வட்டமான குரங்குப்பிடிக் கம்பியும் கொண்டிருந்தது. ஆனால், அப்படிப்பட்ட வடிவத்தை வார்ப்பது சிரமமானதாக இருந்தது.

அதனால், லோரோங் 6ல் மாற்றுவடிவம் பெற்ற கடல்நாக விளையாட்டுத் திடல், அடுக்குக்கற்கள் பதிக்கப்பட்ட சற்று பெரிய தலையும், சறுக்குகளும், சிறுவர்கள் உள்ளே ஏறக்கூடிய வண்ண வளையங்களும் கொண்டு வடிவமைக்கப்பட்டது. இந்த வடிவம் பிரபலமடைந்ததால், சிங்கப்பூர் முழுவதிலும் இருந்த பல்வேறு வீவக விளையாட்டுத் திடல்களில் வெவ்வேறு அளவுகளில் இதேபோன்ற வடிவங்கள் கட்டப்பட்டன. லோரோங் 1ல் உள்ள சற்று சிறிய வடிவமும், அங் மோ கியோ அவென்யூ 3ல் புளோக் 570க்கு முன்னால் உள்ள மற்றொரு வடிவமும் இதில் உள்ளடங்கும்.

சிங்கப்பூரில் கடல்நாக வடிவம் கொண்ட கடைசி விளையாட்டுத் திடல்களில் ஒன்றான தோ பாயோ கடல்நாக விளையாட்டுத் திடல், இளையர் முதல் முதியவர் வரை சிங்கப்பூரர்கள் பலரும் விரும்பும் தனித்துவமான அடையாளச் சின்னமாகத் திகழ்கிறது.



தோ பாயோ விளையாட்டுத் திடலில் சிறுவர்கள் விளையாடுகிறார்கள், 1972
*வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திற்கு நன்றி*



நகரப் பூங்கா (இடது) லோரோங் 6 (வலது) கடல்நாக விளையாட்டுத் திடல்களின் கட்டட வடிவமைப்பு வரைபடங்கள், 1970-1979
*சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் திரட்டு, தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி. கோர் இயன் கீ அன்பளிப்பாக வழங்கியது. © வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்.*



லோரோங் 6ல் கடல்நாக விளையாட்டுத் திடல் கட்டப்படுவதற்குமுன் தோ பாயோ நகரப் பூந்தோட்டத்தில் (இன்றைய தோ பாயோ நகரப் பூங்கா) இருந்த கடல்நாக விளையாட்டுத் திடல், **1970களின் மத்தி**

*வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திற்கு நன்றி*



லோரோங் 1 தோ பாயோவில் உள்ள மற்றொரு கடல்நாக விளையாட்டுத் திடல், 2022
*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*

---

**Toa Payoh Town Park**
**தோ பாயோ நகரப் பூங்கா**

வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (வீவக) வடிவமைத்து, 1970களில் கட்டி முடித்த தோ பாயோ நகரப் பூங்கா, பசுமைப்பரப்புகளுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. இந்தப் பூங்காவுக்குப் பிறகு, சிங்கப்பூரின் பொதுக் குடியிருப்பு நகரங்களில் பசுமைப்பரப்புகள் அத்தியாவசிய அங்கமாகிவிட்டன. ஆரம்பத்தில் தோ பாயோ நகரப் பூந்தோட்டம் என்றழைக்கப்பட்ட இந்தப் பூங்காவின் பெயர் 2002ல் தோ பாயோ நகரப் பூங்கா என மாற்றப்பட்டது. பூங்காவின் 4.8 ஹெக்டேர் நிலப்பரப்பில் தாவரங்கள், மரங்கள், அழகுமிகு குளங்கள், நாட்டுப்புற மாடங்கள் மற்றும்பற்பல வசதிகள் உள்ளன.

தனித்துவமான காட்சிக் கோபுரம் கொண்ட தோ பாயோ நகரப் பூங்கா, 1970களிலும் 1980களிலும் திருமணப் புகைப்படங்கள் எடுப்பதற்குப் பிரபலமான இடமாக இருந்தது. இன்றுவரை, பல்வேறு பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்குப் பூங்காவின் வசதிகளைத் தொடர்ந்து பயன்படுத்திவரும் குடியிருப்பாளர்களின் நினைவில் இந்தப் பூங்கா சிறப்பிடம் பெற்றுள்ளது.


பூங்காவின் ஒரு பகுதியை நகரச் சீரமைப்பு ஆணையம் பழமைப் பாதுகாப்புப் பகுதியாக அறிவித்துள்ளது. காட்சி கோபுரத்திற்கு 2009ல் அத்தகுதி கிடைத்தது. அந்தக் காலத்தில், 25 மீட்டர் உயரத்திலிருந்து சிங்கப்பூரின் பரந்த காட்சிகளை இந்தக் கோபுரம் வழங்கியதால், பூங்காவின் முக்கிய ஈர்ப்பாகத் திகழ்ந்தது.

வருகையாளர்களைக் கவரும் பிரபலமான இடமாகப் பூங்கா விளங்கியதால், குடியிருப்பாளர்களுக்கு மேம்பட்ட சேவை வழங்கும் நோக்குடன் ஒவ்வொரு புதிய பொதுக் குடியிருப்பு நகரிலும் கணிசமான நிலப்பகுதிகளைப் பூங்காவுக்காக வீவக ஒதுக்கத் தொடங்கியது. 1997ல், பூங்கா புதுப்பிக்கப்பட்டு, புதிய கல்பதித்த நடைபாதைகளும் அமர்விடமும் அமைக்கப்பட்டன.

இன்று, தனிநபர்களும் விரும்பும் பொழுதுபோக்கு இடமாகவும் குடும்பங்கள் ஒன்றுகூடும் இடமாகவும் எழில்மிகுந்த தோ பாயோ நகரப் பூங்கா நீடித்து நிலைக்கிறது.



காட்சிக் கோபுரம் பின்னணியில் தெரியும் நகரப் பூங்காவின் பாலத்தில் வருகையாளர்கள், 1970கள்
*சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் திரட்டு, தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*




நகரப் பூங்காவில் நீர்வீழ்ச்சி, 1970கள்
*சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் திரட்டு, தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*



“வீப்பிங் வில்லோஸ்” மரங்களால் சூழப்பட்ட நகரப் பூங்காவின் தோற்றம், தேதியில்லை

*தோ பாயோ சென்ட்ரல் சமூக மன்றத்திற்கு நன்றி*



வருகையாளர்கள் குளத்தருகில் பூங்காவின் அமைதியான சுற்றுப்புறத்தை ரசிக்கின்றனர், 1970கள்

*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*

---

## United Five Temples of Toa Payoh
## தோ பாயோவின் ஐந்து ஐக்கியக் கோயில்கள்

1974ல் நிறைவடைந்த தோ பாயோவின் ஐந்து ஐக்கிய கோயில்கள்தான், ஒரே வளாகத்தில் வெவ்வேறு கிளை மொழிப் பிரிவினரின் வெவ்வேறு தெய்வங்கள் வீற்றிருக்கும் ஐந்து கோயில்களை ஒன்றிணைத்த முதல் சிங்கப்பூர்க் கோயில். தோ பாயோ ஒரு கிராமமாக இருந்த காலத்தில் இந்தக் கோயில்கள் ஒவ்வொன்றும் தொடங்கப்பட்டன. 1960களில் தோ பாயோ நகரின் உருவாக்கத்தின்போது கோயில்கள் வேறு இடத்திற்குச் செல்ல நேரிட்டது.

<u>ச்சீ டியன் கெங் கோயில்</u>

ஹோக்கியன் மற்றும் தியோச்சூ பிரிவினர் 1900களின் முற்பகுதியில் நிறுவிய இக்கோயில், ஆரம்பத்தில் தோ பாயோவின் ஆகப்பெரிய கிராமங்களில் ஒன்றான புவே டெங் கெங் கிராமத்தில் அமைந்திருந்தது. தாவோயிசத் தெய்வமான துவா

பெக் கொங் இங்கு வழிபடப்பட்டார். இந்தக் கோயில் ஒரு தீயணைப்புக் குழுவையும் ஒரு பள்ளியையும் அமைப்பதற்கும் உதவி செய்தது.

தோ பாயோ ச்சாவ் எங் ச்சீ கோயில்

ஹய்னானியச் சமூகத்தால் 1940ல் நிறுவப்பட்ட இக்கோயில், ஆரம்பத்தில் ஜாலான் ராஜாவில் அமைந்திருந்தது. காவல் தெய்வங்களான 108 சகோதரர்கள் இக்கோயிலில் மூல தெய்வங்களாக வழிபடப்பட்டனர். இவர்கள் ஆரம்பகால ஹய்னானியக் குடியேறிகள் என்றும், கடற்கொள்ளையர்களால் கொல்லப்பட்ட பிறகு தெய்வங்களாக வழிபடப்பட்டனர் என்றும் சொல்லப்படுகிறது.

ஃபுக் டக் ச்சீ சங்கக் கோயில்

கென்டனீஸ் சமூகத்தால் 1940களின் முற்பகுதியில் நிறுவப்பட்ட இக்கோயில், ஆரம்பத்தில் பூன் டெக் சாலையில் அமைந்திருந்தது. தாவோயிசத் தெய்வங்களான டூ டீ கொங் (பூமித் தெய்வம்), அவரது மனைவி டூ டீ போ இருவருக்கும் இக்கோயில் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

டொங் ஹெங் காங் ஆ ஹூட் சாலை கம்போங் சின் ஹுவே கோயில்

தியோச்சூ சமூகத்தால் 1864ல் நிறுவப்பட்ட இக்கோயில், ஆரம்பத்தில் ஆ ஹூட் சாலையில் அமைந்திருந்தது. கான் டியன் டா டீ, துவா பெக் கொங் ஆகிய இரு தெய்வங்கள் இக்கோயிலில் வீற்றுள்ளனர்.

வூ ஜீ கொங்

இந்தக் கோயில் எப்போது, யாரால் நிறுவப்பட்டது என்பது தெரியவில்லை. ஐக்கிய கோயிலிலிருந்து இக்கோயில் முன்பே வெளியேறிவிட்டது.



ச்சீ டியன் கெங் கோயிலில் கொண்டாட்டம், 1980கள்
*ச்சீ டியன் கெங் கோயிலுக்கு நன்றி*



ச்சீ டியன் கெங் கோயிலின் தெய்வச் சிலைகள் பல்லாக்கில் ஊர்வலம் சென்றன, தேதியில்லை

*ச்சீ டியன் கெங் கோயிலுக்கு நன்றி*



ச்சீ டியன் கெங் கோயிலின் பக்தர்களும் புவே டெங் கெங் கிராமவாசிகளும் சேர்ந்து 1950களில் தொண்டூழியத் தீயணைப்புக் குழுவை அமைத்தனர், தேதியில்லை

*ச்சீ டியன் கெங் கோயிலுக்கு நன்றி*



ச்சீ டியன் கெங் கோயில் நிறுவிய ச்சீ ஹுவா பள்ளியில் எடுக்கப்பட்ட ஆண்டிறுதிப் புகைப்படம், 1951

*ச்சீ டியன் கெங் கோயிலுக்கு நன்றி*